27-1-1991

Subscription
Island : Rs. 100/-
*For Advertisement*
Apply to:
THE MANAGER
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
*Established : 1841: A Christian Weekly: Published Every Friday*
Vol:- 150 Jaffna, Friday 30 November 1990 No: 24

RICHTEOUSN ESS EXALTETH A NATION BUT SIN IS A REPROAGH TO ANY PEOPLE

*News and Ariicles in Tamil and English Please send them to:*
THE EDITOR,
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

## 175TH ANNIVERSARY OF THE A. C. M. 1816 — 1991

### A leaf from the past

JOURNAL OF MESSRS. RICHARDS AND MEIGS AT JAFFNAPATAM, CEYLON

October 5, 1816

On Tuesday evening the 24th of September we together with our wives went on board a dhony at Colombo for Jaffna. We were accompanied to the dhony by brothers Chater and Griffiths who took a very affectionate leave of us. We sailed about 3 O' clock the following morning. On Wednesday we were all very sea sick. It was a distressing day especially to Mrs. Meigs. We were much alarmed about her on Wednesday evening, but the following day we were all better. We lay at anchor on Thursday night, for fear of the Pearl Banks, and on Friday noon we arrived safely at the mouth of the river at Mannar. Here the water is so shallow that dhonies were obliged to unload and occupy several days in passing through. On Saturday morning we all went up to the fort, about two miles in a boat which Mr. Orr (1) the Collector was so kind as to send us and we spent the day at his house, and were treated very politely. We tarried at Mannar till Tuesday, October 1st in a house near Mr. Orr's. We had been unable to get away before that time, having been obliged to oversee the unloading of all our furniture, and that of our brethren, and having it safely lodged in the Custom - House till the dhony could get over the bar at the mouth of the river. We did not wait for this, as the season was far advanced, but hired two boats in which we put a few of our most necessary articles, leaving the rest to be brought on in the dhony and between 11 and 12 O' clock a. m. set sail for Jaffna, a distance of about 45 miles, where we arrived the same day, but so late that we did not go on shore that night, but slept in the boat. The next morning October 2, we went on shore before sunrise and proceeded to Mr. Mooyart's (2), where we found our friends and met with a most welcome reception. Mr. Mooyart is a sincere friend of missions and missionaries. Brother Newell (3) lived with him while at Jaffna, after him Mr. Lynch (4) then brother Warren (5) so that the room in which they lived has acquired

(Continued on page 4)

## The Air Raids Churches & Christian Institutions

Due to the constant air raids in the Northern Province during the last five months after the resumption of hostilities on the 11th of June, several thousands of homes and several hundreds of business and commercial centres have been severely damaged or destroyed.

Unfortunately even temples, churches and schools were not spared. We give below a list of Protestant Churches and Institutions which suffered heavy damage.

| | | |
|---|---|---|
| 1. | Christ Church and Vicarage, Jaffna | (Anglican) |
| 2. | The Urumpirai Church | (Anglican) |
| 3. | Dharmapuram Church, Kilinochchi District | (Anglican) |
| 4. | Karuna Nilayam Girls' Home, Kilinochchi | (Anglican) |
| 5. | St, Peter's Church, Jaffna | (Methodist) |
| 6. | Jaffna College Primary school | |
| 7. | Levi Spaulding Boys' Home, Vaddukoddai | ( C. S. I. ) |
| 8. | Vaddukoddai Parsonage and Diocesan Office | ( C. S. I. ) |
| 9. | Cathedral Church, Vaddukoddai | ( C. S. I. ) |
| 10. | Tellippalai Church and Parsonage | ( C. S. I, ) |
| 11. | Erlalai North Church, and Parsonage | ( C. S. I. ) |
| 12. | Velanai Church | ( C. S. I. ) |
| 13. | Paranthan Church and Day Care Centre | ( C. S. I. ) |
| 14. | Kilinochchi Church and Parsonage | ( C. S. I. ) |
| 15, | Green Memorial Hospital, Manipay | ( C. S. I. ) |

## A Mystery for Christmas

Jaffna college Vadukoddai conducted its Annual Carol Service on Sunday the 25th November at 5. 30 p. m. in the Cathedral Church. This year the choir performed "A mystery for Christmas" by H. W. Mckney.

The bidding prayer was led by Dr. Robert Porter and the closing prayer was offered by the Rt. Rev. D. J. Ambalavanar. The Cathedral Church was packed to capacity inspite of the bad weather and the political situation.

## India's New Prime Minister

Mr. S. Chandrasekhar, the break away Socialist leader of the Janatha Dal has been sworn in as Prime Minister of India following the failure of Mr. V. P. Singh to win the vote of confidence in his government on the floor of the Lok Sabha at its stormy sessions on 7. 11. 1990. The eleven hour debate ended with the historic vote and the resignation subsequently of Mr. V. P. Singh.

Turbulent scenes were witnessed again in the House on 16. 11. 1990 when the vote of confidence on the new Prime Minister was taken up for discussion at the Lok Sabha. Mr. Chandrasekhar however by a majority of 65 won the vote of confidence in his government, bringing to an end a griping episode in our neighbouring continent.

Mr. Chandrasekhar assumes office as the Seventh Prime Minister of India, the largest democracy in the world with the support of the Congress I given in such ample measure, as to prompt a news broadcast from India to describe the new government as "a proxy government of Congress I".

## First Woman Diocesan

### Not Welcomed By All

The World Anglican Community was given its first woman diocesan bishop on June 29, the Feast of St.Peter and St, Paul, when Dr. Penelope Jamieson was consecrated to the episcopate.

The next day she was installed in St. Paul's Cathedral, Dunedin, as the seventh bishop of Dunedin, New Zeeland.

The 47 year old wife and mother, former University lecturer and then Wellington Vicar, had made history.

According to Austalian Anglican Weekly Church Scene, June 29 gave rise to other ironies and controversies. A few days beforehand unease surfaced in certain senior Maori quarters over Dr. Jamieson's impending role.

The Bishop of Aotearoa, Whakahuihui Vercoe himself a chief, declared Maoris were not ready or able to accept a woman's spiritual authority over men, so he would not attend the ceremonies.

Bishop Leonard Boyles the Roman Catholic Bishop of Dunedin also excused himself from the consecration. It seems he clearly did so under pressure from Rome.

## Daniel Poor

### Memorial Fund

Our readers will remember that during the 200th birth anniversary of The Rev. Dr. Daniel Poor, observed in 1989, the Diocese decided to set up a Deniel Poor Memorial Fund, the interest from which will be used for boarding scholarships for very poor children either at Jaffna College or at Uduvil Girls College. We are happy to report that we have raised nearly two lakhs of rupees though our target was much higher. We remind our readers that the fund is still open and that they are invited to make a contribution to the fund.

The special Danial Poor Souvenir carrying reports of the celebrations, addresses at the seminar along with a biographical sketch of Dr. Poor will soon be publised. It will also include a list of contributors to the Deniel Poor Memorial Fund.

### Tellippalai Hospital

With the General Hospital shifting back from Manipay to Jaffna, the Tellippalai Government Hospital has been shifted to the Manipay Mission Hospital premises from Monday the 12th of November 1990. The International Committee for the Red Cross (ICRC) has taken charge of the Jaffna Hospital. The surrounding area of the hospital has been declared a peace zone.

### Tellippalai Church

The oldest Mission Station in the Jaffna Diocese of the Church of South India is Tellippalai. It is of sentimental interest because of its association with Rev. Dr. Daniel Poor and Rev. James Richards, the pioneer American Missionaries whose bones lie burried in the small Mission Graveyard adjoining the Church.

The Tellippalai Mission House dates back to the Dutch and portugese period, when succes ive missionaries lived there undertaking pioneer mission work in Tellippalai and its environs.

The deseeration of this station by three bombs in succession by the Sri Lanka Air Force destroying the Church and the Mission House on the 19th of October 1990, and spreading panic in the village by the loss of six civilians lives including a 10 months old child was an event of grim significance in mission annals.

(Continued on page 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயதாரகை

UTHAYA THA[illegible]AKAI
Estd. 1841.

மலர் 150 30-11-90 இதழ் 24


## வருகையின் காலம் இரண்டாம்
## ஞாயிறு *09. 12. 1990.*
## திருமறை : விசுவாசம்

ஏசா 55:1-13, 2திமோ. 3:14-4:5, யோவான் 5:36-47

ஏசாயா தீர்க்கதரிசியின் நூலின் 55ம் அதிகாரம் கடவுளின் அழைப் பின் அதிகாரமாக அமைகின்றது. கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள பிளவு எவ்வளவு என்பதை தீர்க்க தரிசி நன்ருக உணர்ந்திருக்கின்ருர். "என் நினைவுகள் உங்கள் நினைவு கள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிருர்". "பூமியைப் பார்க் கிலும் வானங்கள் எப்படி உயர்ந் திருக்கின்றதோ, அப்பபடியே உங்க கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." ஏசா 55:8-9) பிளவு எவ்வளவு பெரிதாயிருந்த பொழுதும் உயர்ந்திருக்கிற கர்த்தர், மனிதனைத் தேடி வருகிறார் அவ னுடன் பேச ஆவலுடன் வருகிறார். தூரச்சென்று மனிதன் ஒளித்திருந்த பொழுதும்' அவனைத் தேடி கர்த் தர் கூப்பிடுகிறார் (ஆதி 3: 8-9) இப்படித் தேடி வரும் கர்த்தரே மனிதரைப் பார்த்து, "வாருங்கள்" "வந்து சாப்பிடுங்கள்",

(ஏசா 55:1, 3) "தேடுங்கள்", "கூப்பிடுங்கள்" (ஏசா : 55:6), "திரும்புங்கள்"(ஏசா 55:7),என்று வெவ்வேறு முறைகளில் அழைக்கி றார், இவ்வழைப்பைக் கேட்டு அவ ரிடம் திரும்பி, அவரிடம் சென்று அவருக்கு செவிசாய்க்கும் பொழுது அவர் வாயிலிருந்து புறப்படும் வச னம் மனிதனுக்குக் கிடைக்கும் (ஏசா 55 : 11). அவ்வசனமே கர்த் தர் கொடுக்கும் "நலமான சாப் பாடு", 'கொழுப்பான பதார்த்தம்'. அது கிரியை செய்யும் வசனம், "அது வெறுமையாய் என்னிடத்திற் குத் திரும்பாமல், அது தான் விரும்பு கிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்". (ஏசா 55 : 11) கட வுள் விரும்புகிறது என்ன என்பதை யும், அவர் அனுப்பிய காரியம் எது என்பதையும் நமக்கு வெளிப்படுத்து வதே கடவுளின் வசனத்தின் நோக் கம். அவருடைய சித்தத்தை அறிந்து அதை நிறைவேற்றவே அதே வச னம் மனிதனுக்கு நலமான சாப் பாடாகவும், கொழுப்பான பதார் த்தமாகவும் பொருந்துகின்றது. ஆண்டவராகிய இயேசுவும் இக் கருத்தையே வெளிப்படுத்தினர். "நான் என்னை அனுப்பினவரு டைய சித்தத்தின்படி செய்து அவ ருடைய கிரியையை முடிப்பதே என் னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவான் 4 : 34)

பரிசுத்த வேதாகமம் அல்லது திரு மறை என்ற நூல் கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு ஆதாரமும் வாழ்க் கைக்கு வழியாகவும் இருந்து வந் திருக்கிறது. அது கடவுளின் வார் த்தை (Word of God) என்பதே அதைக் குறித்த திருச்சபையின் வரைவு இலக்கணம். தீர்க்கதரிசிக ளுக்கூடாகவும், அப்போஸ்தலர் களுக்கூடாகவும், சுவிசேஷகர்களுக் கூடாகவும் கடவுளே பேசினுர் என் றும், கடவுளினுல் ஏவப்பட்டே அவர் கள் தங்கள் நூல்களை எழுதினுர்கள் என்பதும் திருச்சபையின் விசுவாசம். எனினும் திருமறை கடவுளின் வார் த்தை என்று சொல்லும் பொழுது அதன் மெய்விளக்கம் என்ன என் பதையும் உற்று நோக்க வேண்டும் தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தை தங்களுக்கு வந்தது என்று கூறினுர்கள். எரேமியா 1 : 2, 4, எசேக்கியேல் 6 : 1, 36 : 15, ஓசியா 1 : 1, யோவேல் 1:1, ஆமோஸ் 2:1 இன்னும் பல உதா ரணங்களைக் குறிக்கலாம். ஆயினும் அது மனிதருக்குக்கூடாகவே வந்த கடவுளின் வார்த்தை என்பதையும் அவர்கள் மறைக்கவில்லை. "தெக் கோவா ஊர் மேய்ப்பருக்குள் இரு ந்த ஆமோஸ்" ஊடாகவும் (ஆமோஸ் 1:1) அல்லது "பென்ய மீன் தேசத்திலுள்ள ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவ ஞகிய இல்க்கியாவின் குமாரன் எரேமியா" ஊடாகவும், (எரே 1:1) அல்லது "ஆமோத்தின் குமாரஞ கிய ஏசாயா" (ஏசா 2: 1) ஊடா கவும் வந்த வார்த்தைகள் என்ப தையும் அவர்கள் நினைவூட்டினார் கள். அதாவது கடவுள் மனிதருக்கு தனது சித்தத்தை வெளிப்படுத்த முன் வந்தபொழுது தான் தெரிந் தெடுத்த மனிதருக்கூடாகவே பேசி னார். அது கடவுளின் வெளிப் படுத்தலாகையால் கடவுளின் வார் த்தை என்றே கணிக்கப்பட்டது

எனினும் யோ 1:1ல் கடவுளின் வார்த்தையைக் குறித்து இன்னு மொரு உண்மையைக் காண்கிறோம் "ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்திலி ருந்தது. அந்த வார்த்தை தேவனா யிருந்தது", இன்னும் "அந்த வார் த்தை மாம்சமாகி, இருந்தாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்" யோ 1:14. அவ்வண்ணமே எபிரே யருக்கு எழுதிய நிருபத்தின் ஆக்கி யோன் 'பூர்வகாலங்களில் பங்கு பங் காகவும் வகை வகையாகவும், தீர்க்க தரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின கடவுள் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூல மாய் நமக்குத் திருவுளம் பற்றினுர். (எபி 1:1-2) கடவுளின் வார்த்தை கடவுள் மனிதரின் சொற்களினால் எடுத்[illegible] இன்னும் காத்திரமாக தனது வார்த்தையாகிய குமாரன் மூலம், கிறிஸ்து இயேசுவின் மூலம் உலகத் திற்கு தன்னை வெளிப்படுத்தினதே. இந்நாளுக்குரிய நற்செய்திப் பகுதி யின் ஒரு வசனம் இன்னும் தெளி வாக இதை வற்புறுத்துகிறது. "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணு கிறீர்கள், என்னைக் குறித்தும் சாட்சி கொடுக்கிறவைகளும் அவை களே" ((யோ 5:39) கிறிஸ்து இயேசுவே கடவுளின் வெளிப்படுத் துதல். கடவுளின் வார்த்தை மாம்சமாகி மனிதருக்குள் மனித னாய் வாழ்ந்த கடவுளின் குமாரனே கடவுளின் வார்த்தை. எனவே திருமறை அவரைக் குறித்து சாட்சி பகரும் ஒரு நூலாக அமைகிறது. அதைப் படிக்கும் பொழுது கிறிஸ்து இயேசுவையே மையமாகக் கொண்ட நூல் என்பதை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. மாட்டின் லூதர் இவ்வுண்மையை இன்னுமொருவழியில் நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார். "திரு மறை என்பது கிறிஸ்து கிடத்தப்பட்டிருக்கும் தொழுவம்" பெத்தலகேம் தொழுவத்தில் குழந் தையாயிருந்தவரை ஆட்டிடையரும் சாஷ்திரிகழும் தரிசித்து வணங் கியது போல நாமும் இன்று திரு மறையிலிருக்கும் கிருஸ்துவையே தரிசித்து வணங்கி,பின்பற்ற பணி புரிய அழைக்கப்படுகிறோம். நமது விசுவாசம் வார்த்தைகளடங் கிய ஒரு புத்தகத்தில் அல்ல. மாம் சமாகி, நமக்குள்ளே வாசம் பண் ணின கிறிஸ்து இயேசுவிலேயே உள்ளது. அந்தப் புத்தகத்திற்கு உள்ள நிகரற்ற பெருமதி அது கிறிஸ்து இயேசுவைக் குறித்து சாட் சிபகரும் நூலாயிருப்பதன் மூலமே. "பழைய ஏற்பாட்டில் மறைவா யிருக்கும் கிறிஸ்துவே புதிய ஏற்பாட்டில் வெளியரங்க மாய்க் காட்சி அழிக்கிறார்" என்று புனித அகஷ்தீன் கூறினார். அந்தக் கிறிஸ்துவை சந்திக்கும் ஒரு இடமாகவே திருமறை இந்நாட்க ளில் நமக்கு அமைந்திருக்கிறது

விக்றர் கியோகோ (Victo Hugo) என்ற பிரான்சு தேச ஆக்கியோன் இங்கிலாந்து தேசத்தைப்பற்றி ஒரு முறை கூறினது, "இங்கிலாந்தில் இரு நூல்கள் உள்ளன. அவை திருமறையும், சேக்ஸ்பியரும் இங்கி லாந்து சேக்ஸ்பியரை ஆக்கியது' திருமறை இங்கிலாந்தை ஆக்கியது'. இங்கிலாந்தைக் குறித்துஇது எவ் வளவு உண்மை என்பதை ஆட்சே பிக்கலாம் ஆனுல் திருமறைக்கு, நாடுகளையும், நாகரீகங்களையும், சமுதாயங்களையும், சரித்திரங் களையும் ஆக்கியமைக்கும் சக்தி உண்டென்பதே விக்றர் கியோகோ வின் கூற்றின் பொருள். இன்றும் திருமறையைப் படிக்கும் நாம் கட வுள் இன்றும் நம்மொவ்வருவருட னும் பேசுகிறார்.வா என்று அழைக் கிறார். "வந்து சாப்பிடுங்கள்", "தேடுங்கள்" "கூப்பிடுங்கள்", "திரும்புங்கள்", என்று மறுபடியும் பேசுகிறார் என்பதைக் காண்போம். ஆனுல் இவ்வழைப்பு கலிலேயாக் கடலோரத்தில் "என்னைப் பின் பற்றி வாருங்கள்" என்று அழைத்த ஆண்டவரின் அழைப்பே. ஆயத் துறையிலுருந்தவனை "என்னைப் பின்பற்றிவா"என்று அழைத்த ஆண் டவரின் அழைப்பே.

நித்திய ஜீவனை அடைய நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட செல்வந்தனாகிய இளம் தலைவனுக்கு, "உனக்கு உண்டான [illegible] விற்று, தரித்திரக்குக் கொடு ......... பின்பு என்னைப் பின் பற்றிவா" என்று அழைத்த ஆண் டவரின் அழைப்பே. பாடுகளையும் மரணத்தையும் ஜெயித்து உயிர்த் தெழுந்தபின், "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று மும் முறை பேதுருவைக் கேட்டபின் "நீ என்னைப் பின்பற்றிவா" என்று அழைத்த ஆண்டவரின் அழைப்பே திருமறையைத் திறந்து படிக்கும் பொழுது ஆண்டவராகிய இயேசு வே இன்றும் என்னுடன் பேசுகி றார் என்ற நம்பிக்கையுடனேயே அதை நாம் அணுக வேண்டும். "நீ கடவுளின் வார்த்தையைப் படிக்கும் பொழுது, நீ உனக்கு நித்தம் நினை வூட்ட வேண்டியது. அது எனக்குப் பேசுகிறது, என்னைப் பற்றிப் பேசு கிறது" என்று சொறன் கியேக்க கோர் (Soren Kierkegaard) நமக்கு நினைவூட்டுகிறார்.

திருமறை நம்முடன் இன்றும் பேசும் கடவுளின் வார்த்யையாயிருப்பத னால் சங்கீதகாரன் கூறினது போல் "கர்த்தருடைய வேதத்தில் பிரிய மாயிருந்து, இரவும் பகலும் அவ ருடைய வேதத்தில் தியானமா யிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்ற நம்பிக்கையில் இரவும் பக லும் அதில் தியானமாயிருப்போ மாக.

### சுருக்கச் செபம்

"அருள் நிறைந்த ஆண்டவரே, நாங்கள் மெய்யறிவு பெறும் வண் ணம் திருமறையை எழுதுவித்திருக் கிறீர். நாங்கள் அதை ஏற்றவாறு கேட்டு, படித்து கவனித்து, கற்ற றிந்து உட்கொள்ளத் துணை செய் யும். எங்கள் மீட்பர் இயேசுகிறிஸ் துவின் மூலம் நித்திய ஜீவனின் நம் பிக்கையை நீர் அளித்திருக்கிறீர். திருமொழியால் உண்டாகும் பொறு மையாலும் ஆறுதலாலும் நாங்கள் அதை ஆவலுடன் ஏற்று, உறுதி யாய்ப் பற்றிக் கொள்ள எங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று உம் மைத் தாழ்மையோடு வேண்டுகி றோம்."

மறைத் தொண்டன்".

---

### திருச்சபையும் .........

லூரி எந்த அளவுக்குத் திறமை யுடன் பணியாற்றுகிறதோ, அந்த அளவுக்கு அது வெற்றியுடையது என மதிப்பிடலாம் என்று அனைத் துலக இறையியல் நிறுவனம் கூறு கிறது. சுன்னாகம் கிறிஸ்தவ இறை யியல் கல்லூரி இந்தக் கருத்தினை நினைவிற் கொண்டு பணியாற்றி வருகிறது. இதற்குச் சபையாரின் ஒத்துழைப்புத் தேவை. திருச்சபை இறையியல் கல்விப் பணியில் ஆர் வமும் ஊக்கமும் காட்டுவது அவ சியம்.

---

### யாழ் மாவட்டத்தில் முப்பது பேர் முதலாம் தர அதிபர்களாக நியமனம்

யாழ்மாவட்டத்தில் முப்பது பேர் முதலாம் தர அதிபர்களாக நிய மனம் பெற்றுள்ளனர். இவர்கள் 1. 6. 89 முதல் முதலாம் தர அதி பர்களாக நியமனம் பெற்றுள்ள தாக,செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது இவர்களின் நியமனங்கள் விரை வில் வடபிராந்திய கல்விப் பணிப் பாளரால் வழங்கப்படும்.

### நல்லூருக்கு இடமாற்றம்

இல்ங்கைத் தமிழர் ஆசிரியர் சங் கத்தின் தலைமைப் பணிமனை நல் லூருக்குத் தற்காலிகமாக இடமாற் றப்படவுள்ளது. இப் பணிமனை, சமீபத்தில் இலங்கை விமானப்படை மேற்கொண்ட தாக்குதலால் பலத்த சேதமடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை ஒளி

திரள் செல்வத் தில்நற் கீர்த்தியே சிறப்பு;
பொன்வெள்ளி தனிலும் தயையே நன்று

-- நீதிமொழிகள் - 22:1 —

# எங்கள் கருத்து

## நம்பினோர் கெடுவதில்லை

இறைவனை நம்பினோர் கெடுவதில்லை என்பது திருமறை வாக்கு. பிறசமய வேதங்களும் இதனையே கூறுகின்றன. இறை நம்பிக்கை ஒரு போதும் வீணாவதில்லை. இது வரலாறு கண்ட உண்மை. ஆதித் திருச்சபையும் நெருக்கடிகாலத்தில், துன்புறுத்தப்பட்ட வேளைகளில் இந்த உண்மையைத் தம் அனுபவத்தில் கண்டு சாட்சி பகர்ந்தது.

கடவுளால் படைக்கப்பட்ட மனிதன், தன்னைப் படைத்தவரில் உறுதியான நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆனால், தன்னம்பிக்கை அற்றவன், தன்னிலும் மேம்பட்ட இறைவனின் ஆற்றலை உணர்வது சாத்தியமில்லை. ஒருவன் தன்னைப் படைத்த கடவுளிலும் நம்பிக்கை வைக்க வேண்டும், தன்னிலும் நம்பிக்கை வைக்க வேண்டும். இதற்குத் தூய ஆவியானவர் துணை செய்வார். அப்பொழுதுதான் நமது வாழ்வு பயனுள்ளதாகத் திகழும்.

ஒருவன் இறைவனில் அழுத்தமான நம்பிக்கை கொண்டு, இறை பணிக்குத் தன்னை முழுமையாகத் தத்தஞ் செய்தால், அவனின் தன்னம்பிக்கை பெருங்காரியங்களை மேற்கொள்ள அவனுக்கு உந்துதலாய் அமையும். அவனின் முயற்சிகள் வெற்றி பெற தூய ஆவியானவர் துணைபுரிவார். ஒருவனின் வாழ்க்கையாகிய வண்டியில், தன்னம்பிக்கை, தெய்வநம்பிக்கை ஆகிய இரண்டு குதிரைகள் பூட்டப்பட்டால், அவன் எவ்வித நெருக்கடியான சமயங்களிலும் வெற்றிகரமாகத் தன் வாழ்க்கையை ஓட்ட முடியும், என்பது பலர் அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை. 'தங்களுக்கு தாங்களே யார் உதவி செய்கிறார்களோ, அவர்களுக்குக் கடவுள் உதவியருளுவார்' என்பது முதியோர் தம் அனுபவத்தில் கண்ட முதுமொழி.

நெருக்கடிகள் நிறைந்துள்ள இன்றைய சூழ்நிலையில், இத்தகைய வாழ்க்கையே கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கிறார். பொதுவாக இந்நாட்களில் நாம் பயத்தோடும் திகிலோடுந்தான் வாழ்கின்றோம். ஆனால் நித்தம் பயத்துடன் இருந்தால், நமது நிலைமை எவ்விதத்திலும் திருந்தாது. இருள் சூழ்ந்த இக்காலம் ஒளிமயமாக்கப்பட வேண்டுமானால், நாம் நம்பிக்கையோடு ஆக்கப்பணியில் ஈடுபட வேண்டும். இதுவே இறைவனின் திருவுளச்சித்தமாகும். "இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அதுதோன்றும்;" (ஏசா. 43:19) என்பது கடவுளின் வாக்கு.

ஆகவே, இந்த உண்மையை உணர்ந்து, இவ்விருள் மயமான காலத்தில், நம்பிக்கையிழந்து, தளர்ந்து, சோர்ந்திருக்கும் நம்மக்களுக்கு நம்பிக்கையின் ஒளியூட்டுவது நமது கடமை. பொறுமையிழக்காமல் கடவுளின் புதிய காரியத்தைக் காண நம்பிக்கையோடு காத்திருப்போமாக.

## வற்றுத நம்பிக்கை

### வற்றாத நம்பிக்கை

"இறைவன் தம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப நமக்கு வற்றாத நம்பிக்கையைத் தரும் புதுப்பிறப்பை அளித்தார்."

—(I பேது. 1:3)

'கடவுள் எங்கள் மேல் எவ்வளவு அதிகமாக அன்பு செய்கிறார் என்பதைக் கண்டுணரும் போதுதான், எங்கள் நம்பிக்கை உயர்ச்சியடைகிறது' என்றார் புனித அகுஸ்தீன் அடிகளார். ஆம். நம்பிக்கையின் முக்கியத்துவத்தை நாம் உணர்வது அவசியம். நம்பிக்கையே நம் வாழ்க்கையின் அச்சாணி. கடவுள் நமக்கருளிய மாபெரும் கொடைகளுள் நம்பிக்கை ஒன்றாகும்.

தன்னம்பிக்கை கொண்டவர்களும், பிறரிடத்தில் நம்பிக்கை வைப்போரும். இவர்கள் வாழ்க்கையில் பெருஞ்சாதனைகளைப் புரிந்திருப்பதை வரலாற்றில் காண்கிறோம். நம்பிக்கை என்பது பரஸ்பரமானது. நாம் ஒருவரை நம்பாவிட்டால் அவரும் நம்மை நம்பமாட்டார் என்பதை. நாம் அனுபவத்தில் அறிவோம்.

இதை விளக்க ஒரு உதாரணத்தை காண்போம்: அலெக்ஸாண்டர் மாபெரும் வீரன். அவர் அனேக நாடுகளைத் தன்வயமாக்கியவன். பல வெற்றிகளைப் பெற்றவன். இதற்கு முக்கிய காரணம். அவன் தன் முடிவுகளை எப்போதும் துணிந்து விவேகத்தோடு எடுக்கிறவன். எந்த விடயத்திலும் குழப்பமற்ற மனம் படைத்தவன். காலத்தை மதிக்கத் தெரிந்தவன். விரைந்து செயல்படுகிறவன். மனிதாபிமானம் மிக்கவன். தோல்வியடைந்தவர்களையும் அவர்களுடைய வீரத்திற்காக மதிப்பவன். மற்றவர்களிடம் நம்பிக்கை வைத்துச் செயல்படுகிறவன்.

மற்றவர்களிடம் அவன் வைத்திருந்த நம்பிக்கையே அவனுடைய அரிய பல சாதனைகளுக்கு உறுதுணையாக இருந்தது. ஒரு நாள் பாரசீகத்தின் மீது படையெடுத்த அலெக்ஸாண்டர், சிட்னஸ் நதிக்கரையில் முகாமிட்டிருந்தான். அப்பொழுது அவன் கொடிய நோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டான். அலெக்சாந்தருடன் வந்திருந்த கிரேக்க வைத்தியர்கள் தங்களால் இயன்றளவு முயன்றும் அவனுடைய நோயைக் குணப்படுத்த முடியவில்லை. அலெக்சாந்தர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தான். இந்த நோயின் தன்மை பாரசீக மருத்துவருக்குத்தான் புரியுமென்றும், அம்மருத்துவர்களினால் தான் இந்நோயைக் குணப்படுத்த முடியும் என்றும் அலெக்சாந்தருக்கு ஆலோசனை கூறப்பட்டது.

அலெக்சாந்தரின் எதிரியும் பாரசீகமன்னனுமான டேரியசின் அரண்மனை மருத்துவர், அலெக்சாந்தரின் நோயைக் குணப்படுத்த முன் வந்தார். எதிரி நாட்டு மருத்துவரை, நோயைக் குணப்படுத்த அழைப்பது தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பான செயல் என்று அலெக்சாந்தரின் நண்பர்கள் அவனை எச்சரித்தனர். இருந்தும், அலெக்சாந்தர் அவர்களுடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது, பாரசீக மருத்துவரை மருந்து தயாரித்துக் கொண்டு வரச் சொன்னான்.

அந்த மருத்துவன் மறு நாள் மூலிகைகளால் ஆன மருந்தினைத் தயாரித்து, அதை ஒரு கோப்பையில் எடுத்துக் கொண்டு அலெக்சாந்தரிடம் வந்தான். அம்மருத்துவன் கோப்பையோடு வந்த சமயம், அலெக்சாந்தரின் நெருங்கிய நண்பனும் மெய்க்காப்பாளனுமான பார்மினியோன், அவசரமாக ஒரு கடிதத்தை அலெக்சாந்தருக்கு அனுப்பினான். அக்கடிதத்தில், விரோதி நாட்டு வைத்தியன் மருந்து என்கிற பெயரில் அலெக்சாந்தரைக் கொல்லுவதற்கு விஷத்தைக் கொண்டு வந்திருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

கடிதத்தைப் படித்த அலெக்சாந்தர் கொஞ்சமும் பதட்டப்படாமல், மருத்துவனிடமிருந்து கோப்பையை வாங்கி, அதிலுள்ள மருந்தை அருந்தியபடி தனக்கு வந்த எச்சரிக்கைக் கடிதத்தை அம் மருத்துவனிடம் காட்டினான்.

(தொடரும்)

### இயேசுவுக்காக!

நான் கண் உறங்கும்
முன்னால்
காதங்கள் பல கடந்திட
வேண்டும்
சாதனைகள் பல புரிந்திட
வேண்டும்
உறுதிகள் பல காத்திட
வேண்டும்
விழி மூடி கைசோர்ந் திறக்கும்
முன்னர்
நான் இயேசுவுக்காக! .....

## திருச்சபையும் இறையியல் கல்விப் பணியும்

திருச்சபை நாட்டின் முன்னேற்றத்தில் ஈடுபாடுடையது ஆதல் வேண்டும்; நாட்டின் நலத்திலே நாட்டம் உடையதாய்த் திகழ வேண்டும். கிறிஸ்தவர்கள் நாட்டு முன்னேற்ற வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபடுவது இன்றியமையாதது, தவிர்க்க முடியாதது. இறைவன் விரும்புவதும் இதுவே.

சூழ்நிலைமைகளை மாற்றி அமைக்கவும், சூழ்நிலைகளுக்கு ஏற்ப அமையவும், இன்றைய இறையியல் முன்வர வேண்டும். இதனைக் கருத்தாகக் கொண்டு செயல் முறையில் ஆக்கமுறும் இறையியல் (Theology in Action) பற்றி ஆராய்தல் அவசியம்.

இன்று திருச்சபை செய்து வரும் தவறுகளைப் பற்றிப் பலர் பலவாறு விமர்சிக்கின்றனர். அவர்கள் குறிப்பிடும் சில தவறுகள் திருச்சபை உலகினை நேசிக்காது இகழ்தல், சமுதாய ஒற்றுமையினின்றும் குலைதல், இறையியலை நாட்டுக்குரியதாக்க மறுத்தல், நிறுவனங்களை ஆளுகை செய்வதில் ஒழுங்கீனம், சிறிய சபைகளைக் கருதிப் பேணாது விடுதல் என்பதே. இத் தவறுகளைத் தவிர்க்கத் திருச்சபை தூய ஆவியானவரின் துணை கொண்டு செயல்பட வேண்டும்.

இன்று, சுன்னாகம் - இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் இறையியல் கல்வி பற்றிய சிந்தனையில் - சூழ்நிலைக்கேற்ப இறையியலை அமைத்து ஆற்றலுடன் செயல்பட வேண்டும் என்பது முக்கிய இடமெடுத்துள்ளது. இதனை ஆங்கிலத்தில் - "Contextualisation" - என்று கூறுவர். தமிழில் இதனை "சூழிசைவு இறையியல்" எனலாம். சூழ் நிலைக்கு ஒத்துப்போகும் இறையியல் என்பது இதன் பொருள் அல்ல. சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஆக்கமுறையில் இறையியலை அமைத்து ஆற்றலுடன் செயல்படத் தூண்டுவதே 'சூழிசைவு இறையியல்' என்பது.

அனைத்துலக இறையியல் கல்வி நிறுவனம் இதனை இறையியல் கல்லூரிகளுக்குச் சிபார்சு செய்துள்ளது. இறையியலைத் தன்னாட்டுக்குரிய தாக்குதலைக் (Indigenisation) காட்டிலும் 'சூழிசைவு இறையியல்' மிகச் சிறந்ததாகும், என்று அனைத்துலக இறையியல் அறிஞர்களிற் பெரும்பாலானோர் கருதுகின்றனர். தன்னாட்டு மயமாக்குதல் என்பது, இறையியலைத் தன்னாட்டின் சீரிய பண்பாட்டின் அடிப்படையில் கட்டியமைப்பதாகும். ஆனால், 'சூழிசைவு இறையியல்' என்பது அத்துடன் சார்பிலா இயக்கங்கள், நாட்டின் முன்னேற்றப் பெரும் முயற்சிகள், பழைய மரபுகள், எதிர்கால இயக்கங்கள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு புதியதாய் மலர்வது. கடவுளுடைய உலகினுக்கும் (God's World), கடவுளுடைய வாக்கினுக்கும் (God's Word) உள்ள எதிர்ப்பு நிலையை நீக்கி, எதிர்பார்ப்பு நிலையை ஆக்கி, தோன்றுவது.

சூழிசைவு இறையியலில் ஆர்வங் காட்டும் இறையியல் நிறுவனங்கள் பின்வரும் நான்கு இயல்புகளைக் கவனிக்க வேண்டும். திருச்சபையின் அருள் தொண்டு (Mission), இறையியல் நோக்கு (Theological approach), கல்வி முறை (Teaching Method) கல்வியமைப்பு (Structure of Education) இந்த நான்கு முறைகளில் ஓர் இறையியல் கல்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Editorial 1*

# An Anniversary Reflection

## Theological Education

A landmark event which takes place among others which have marked the starry moments of 175 years of mission annals, is the plan outlay for Theological Education in the North drawn up in 1983 by the Jaffna Diocese of the Church of South India. Signifcantly the year 1983 was the year of the communal riots in the South which plunged the country into an abyss of barbarism, necessitating for the first time the need for varying perceptions of our local tasks as a Christian Church.

Theological Education in the North is not a new venture. Theological education began with the establishing of the Batticotta Seminary in 1823. On its suspension in 1855, Rev. M. D. Sanders revived Theological education in 1859, but not under very happy auspices. The halo surrounding the first Principal Rev. M. D. Sanders and the calibre of the Staff (local stalwarts served on the staff as Messrs. B. H. Rice, J, R. Arnold and J. P. Cooke) were clouded by the temper of the the time when the youth seekig theological education were still smarting under the chilling effects of the scarpping of English in all schools of the Mission and the non-availability then of suitable text books in Tamil for those who wished to embark on a theological career

For many years, the theological school numbered from 20 to 30 students in two or three class and graduated a classes every second or third year.

But it is a sifinificant refleetion that the Anderson-Thomson Depuation which made a decision of far reaching ramification did not intend to include theological education in their purview They suggested to the Mission that a select class of the theological students instructed in English be a regular feature of the Seminary. It did show the importance the Depuation attached to theological education in the Seminary as distinct from general education. But the local Mission authorities thought it indiscreet to maintain an English stream only for one group of students and in particular at the Seminary at a time when sensitivities ran high over the decision to give up English as a medium of instrucation,

In this context,, the name of Rev. Marshall D. Sanders who died at Vaddukoddai on August 29, 1871, brings to sharp focus a pioneer who not merely chaired, as its first Principal, the Mission Theological College, but also spearheaded a campaign in America for the setting up of a strong Board of Trustees in The U. S. for Jaffna College and its varied branches of activity. (A Hall in his memory was erected at Tellippalai in 1879). The Theological and Training Institute was shifted to Tellippalai in 1871 and put under Rev. W. W. Howland. According to Mission records' a class which graduated in 1875, (115 years ago) comprised:- Rev. W. P. Nathaniel, Rev. S. John, Rev. William Joneph Rev. S. Eliathamby, Rev. Isaac Paul aud Rev. S. Veerakathy.

The Christian Theolgical Seminary at Maruthanamadam, begun in 1983, true to tradition, has not been established under very happy auspices. Serious convulsions in national life have made higher education in any branch a distant goal. A few years of necessary breathing space is necessary for the new institution to show results. But it is good to remember that the Seminary is the out come of a dire need and a conviction that the Jaffna Diocese of the C. S. I., sa successors of the American Ceylon Mission (established in 1816) should not lightly shove away the responsibility cast on it by its historical traditions, to lighten the weight of the developing crisis on higher education in all its branches in this land.

A rich diversity of convictions about purpose, mission and role marks today the character of theological education in many parts of the world - Amidst this diversity, the CHRISTIAN CENTURY in a lead article has this to say on the central question of accountability to the Church:-

"The Seminaries should NOW return to the rock from which they were hewn."

Registered aa News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/104/89 News Printed for the Jaffna Diocese of the Church of South India at The AmericanCeylon Misson Press182, 1st, Cross Street, Jaffna on Friday, 23rd Nov. 1990 and published by The Rev. G. D. ANANDARAJAN, 182, Firs Cross Street, Jaffna.

## Jaffna College Prize Giving Extracts from the address delivered by the Chief Guest Rev. Dr. Francis Soundararaj

These disadvantages have in a sense stunted our educational development. However, at the close of the century change has become imminent. In India the social imbalance is becoming a matter of serious concern. Education is becoming more widely participatory. Free education, reservation for the deprived classes, and other encouragements have brought about a change in scenario. The learners are no longer of homogenous privileged group of the urban or upper-middle class sections of society. From homogeneity we move towards heterogencity. The system of education most quickly respond to such a welcome change. The implications in terms of restructuring curricula, planning of remediation programmes, creation of opportunities of employment and academic development are the new challenges that ought to be met.

Another changes, equally significant as the democratisation of education, is the integral connection between national development - developing countries can hardly afford to bypass this - and knowledge. During the 20th century knowledge has been walking hand-in-hand with development. This is reflected in the changing patterns of the curricula, which reflect the different phases of nationals development and corresponding popular demand. Earlier than the fifties there were hardly any changes in university curricula in India. One who acquired proficiency in speaking and writing English was good enough to enter upon a career and make a mark in society. However, in the fifties, owing to the beginning of national economic planning for development, Economics came to occupy the prime of place superseding History or Philosophy. The subsequent emphasis on industrial development tilted the scale in favour of sciences and of Physics and Chemistry in particular. Further develoment in terms of mechanisation and technological advances favoured bio-sciences. With the Computer revolution peaking up, Physics and Mathematics are in the ascendancy. As attention is increasingly being given to generation and conservation or distribution of wealth, Commerce and Management Sciences are prominent. Equally prominent are profes sions of medicine and ongineering which go to develop individual material welfare and prosperity. A cursory look at the shifting curricula shows that, at least in a developing nation, education spontaneously and necessarily iundergirds national development One may be tempted to condemn such development as pursuit of materialism. perhaps the charge may be true if an affluent naton pursues materialism for its own sake, As the saying goes "unless there is a surface you cannot paint a portrait" and, accordingly, unless there is minimum development, a nation cannot fulfil its aspirations. To that degree materialism is more a help than a sin. And education will do well to be supportsive of it. Only the purpose of development shall be noble.

(to be continued)

## 175th Aniversary .........

(Continued on from page 1)

the name the "Prophets Chamber".

Brother and sister Poor left Colombo four days before we did that is on the 20th of September in a boat with Mr. Wilkins, a merehant of Colombo, who was coming to Jaffna on business. The dhony in which we came being much crowded, did not afford good accommodations for more than two families for which reason Mr. & Mrs. Poor embraced the opportunity of coming with Mr. Wilkins. Mrs. Poor suffered much on the voyage and was reduced very low but finally arrived in safety on the 26th of September.

Missionary Herald, January 1818

01. Mr. Orr - Collector, Customs, Mannar
02. Mr. Mooyart - Dutch Gontleman, Magistrate, Jaffna
03. Rev. Newell - American Missionary - visited Jaffna in 1813
04. Rev. J Lynch - Methodist Missionary - arrived in Jaffna in 1816
05. Rev. Warren - American Missionary - arrived in 1816
06. Rev. Meigs and Rev. Richards belonged to the first batch of American Missionaries who came to serve in Jaffna in 1816.

(continued from page 1)

## Tellippalai Hospital

The roof of the urch, winCh dows and the altar were badly damaged. The Presbyter of the Church and some refugees who were near the site had a miraculous escape.

Union College which ramained a Mission Institution till the take over in 1960 suffered widespread damages to its buildings and many of which are in a state of collapse.

The Mission House at Tellippalai was recently repaired after it had been damaged earler twice during the offensive of the Sri Lankan Air Force and afterwards when the I P K F was in Jaffna.

## CORRECTION

In the Editorial column page 6 of our last issue of 23-11-1990 in paragraph 6 last section "while the normel consignments to Jaffna were 12,000 Metric Tons per month' and not 12 Metric Tons as erroneously stated.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org